18th February 1959]

(ஆ) தமாஷ் வரி மூலம் கிடைக்கப்பட்ட தொகையிலே, பஞ்சாயத்து போர்டுக்கும், நகர சபைக்கும், கார்ப்பரேஷன்களுக்கும் பகிர்ந்தளிக்கப்பட்ட தொகை எவ்வளவு ?

THE HON. SRI R. VENKATARAMAN : (அ) Rs. 1,50,30,522

(ஆ)—

	RS.
Corporation	30,11,223
District Boards	2,36,953
Municipalities	58,58 745
Panchayat Boards	43,16,542
Others such as township Committees and Cantonment Boards	44,338
Total ..	1,34,97,801

Sathanur Dam

* 454 *Q.*—SRI A. GOVINDASAMY : கனம் பொது மராமத்து அமைச்சர் அவர்கள் தயவு செய்து பதிலளிப்பாரா—

(அ) சாத்தனூர் அணை கட்டுவதற்கு மொத்தம் எவ்வளவு தொகை ஒதுக்கப்பட்டது?

(ஆ) எவ்வளவு செலவானது ?

(இ) மீதமுள்ள தொகை எவ்வளவு ?

(ஈ) அந்தத் தொகையைக் கொண்டு என்ன செய்ய உத்தேசம்?

THE HON. SRI P. KAKKAN : (*a*) Rs. 289·28 lakhs.

(*b*) Rs. 236·385 lakhs.

(*c*) Rs. 52·895 lakhs.

(*d*) A proposal to erect 10 feet gates over the crest of Sathanur Dam at an estimated cost of Rs. 5·5 lakhs for supply of surplus water to grow second crop under Tirukoilur anicut during January to April is at present under the consideration of Government.

SRI A. GOVINDASAMY : இந்த சாத்தனூர் வாய்க்காலுடன் புதிதாக வெட்டப்பட வேண்டிய வாய்க்கால் பூராவும் வெட்டியாய்விட்டதா ? மேலும் சில வாய்க்கால்கள் வெட்ட வேண்டுமென்ற ஆலோசனை இருக்கிறதா ?

THE HON. SRI P. KAKKAN: என்னிடத்தில் தகவல் இல்லை. வாய்க்கால் வெட்டுவதற்கு ஆலோசனை செய்யப்பட்டு வருகிறது.

SRI S. A. M. ANNAMALAI : இந்த சாத்தனூர் திட்டத்திலிருந்து திருவண்ணாமலைக்குத் தண்ணீர் கொண்டுவருவதற்கு திட்டம் இருப்பதாக ஒரு உத்தியோகஸ்தர் சொன்னார். இப்பொழுது திருவண்ணாமலையில் தண்ணீர் கஷ்டம் அதிகமாக இருக்கிறது. அப்படி இருந்தால் அதிகப்படியாக இருக்கும் பணத்தை திருவண்ணாமலைக்குத் தண்ணீர் கொண்டுவருவதற்கு உபயோகிக்க சர்க்கார் நடவடிக்கை எடுக்குமா ?

THE HON. SRI P. KAKKAN : இப்பொழுது இரண்டாவது ஸ்டேஜைப் பார்க்கிறோம். திருவண்ணாமலைக்குத் தண்ணீர் திட்டத்தைக் கொண்டுவருவதற்கு என்னிடத்திலும் கனம் முதல் மந்திரி அவர்களிடத்திலும் தாங்கள் சென்றிருந்தபோது சொல்லியிருக்கிறார்கள். அது கவனிக்கப்படும்.

[18th February 1959

Sri A. GOVINDASAMY: இந்த சாத்தனூர் நீர்த் தேக்கத்தினுல் பொதுவாக வரக்கூடிய வாய்க்கால் ஏற்கனவே போடப்பட்ட திட்டங்கள் பூராவும் நிறைவேற்றுவதற்கு வேண்டிய தொகை போக உடனடியாக நடவடிக்கை எடுப்பார்களா ?

The Hon. Sri P. KAKKAN: இரண்டாவது திட்டத்தை எடுத்துக் கொண்ட பிறகுதான் எங்கு அணைக்கட்டுப் போடுவது என்பது பூராவும் எடுத்துக்கொள்ள முடிவு செய்யப்படும்.

Local Development works

* 455 *Q.*—**Sri S. LAZAR:** Will the Hon. the Chief Minister be pleased to state—

(*a*) whether any circular has been issued to all District Collectors not to take up or sanction any new works under Local Development works; and

(*b*) if so, the reason therefor?

The Hon. Sri C. SUBRAMANIAM: (*a*) Yes, Sir.

The instructions apply to the sanction of new works under the Local Development Works Programme only.

(*b*) The reasons are as follows:—

(i) The Central grant allotment for the year 1957–58 is much less than the anticipated allotment; and

(ii) The Planning Commission has informed that no provision is likely to be made available after the Current year under the Local Development Works Programme and that it will not, therefore, accept any liability for the works remaining incomplete after 31st March 1959.

Sri V. K. RAMASWAMY MUDALIYAR: As some of the works are not likely to be completed before 31st March 1959, will the Government consider the desirability of extending them to the next year also if necessary?

The Hon. Sri C. SUBRAMANIAM: Sir, I expect all the works to be completed. If, however, there was any exceptional case, that may be considered on its merits.

Sri S. LAZAR: ஸார், கிராமப் பகுதிகளிலே போடப்பட்ட திட்டம், ஸ்தலஸ்தாபன அபிவிருத்தி திட்டம். இவைகளை தொடர்ந்து நடத்த வற்புறுத்தி மீண்டும் ரூரல் ஏரியாவிற்கு கொடுக்க சர்க்கார் முயற்சிக்குமா ?

The Hon. Sri C. SUBRAMANIAM: அவ்வாறு வற்புறுத்தி இருக்கிறது. பிளானிங் கமிஷன் இதைப் புனராலோசனை செய்வதாக இருக்கிறார்கள்.

Rice

* 456 *Q.*—**Sri A. GOVINDASAMY:** கனம் உள் விவகார அமைச்சர் அவர்கள் தயவு செய்து பதிலளிப்பாரா—

(அ) சென்னையிலும் சுற்றுப்புற மாவட்டங்களிலும் 1958 அக்டோபர் முதல் வாரத்தில் அரிசி விலை என்ன?